**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், வலங்கைமான்.**

2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 22 /2019**

வாதி தரப்பு சாட்சியாக PW. 2 ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் 44வது சட்ட ஏற்பாடின் படி திரு. P. ஜேசுபாலன், எம்.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான் அவர்களால் ஆணையிடப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரஜித் | Father Name | : | பன்னீர் |
| Village | : | வலங்கைமான் | Taluk | : | வலங்கைமான் |
| Caste | : | | Calling | : | முதுநிலை வருவாய் ஆய்வாளர் |
| Religion | : | | Age | : | 32 |

<u>முதல் விசாரணை -</u>

இந்நீதிமன்றத்திலிருந்து வட்டாட்சியருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு அதன் பெயரில் வட்டாட்சியரிடம் அனுமதிக் கடிதம் பெற்று அவர் சார்பாக இந்நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நீதிமன்ற அழைப்பாணையில் கோறப்பட்டுள்ள ஆவணங்களின் அசலினை நான் கொண்டு வந்துள்ளேன். நான் கொண்டுவந்துள்ள சிட்டா, அடங்கல், அ-பதிவேடு மற்றும் புல வரைபடத்தினை இந்நீதிமன்றத்தில் முறையே **சா.சா.ஆ.1 முதல் 4 வரையாக** குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.1 ஆன சிட்டாவில் நில உரிமையாளராக புஷ்பம், முத்துலெட்சுமி, சரஸ்வதி, தமிழரசி ஆகியோர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.3 ஆன அ- பதிவேட்டில் முனுசாமியின் பெயர் நில உரிமையாளராக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 ஆன அடங்கலில் நில உரிமையாளராக புஷ்பம் மற்றும் 3 நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 எங்களது வருவாய்த்

துறை சம்பந்தப்பட்ட ஆவணம்தான். நான் கொண்டு வந்துள்ள ஆவணங்கள் அனைத்திலும் 137/3, 160/6, 160/4 ஆகிய 3 புல எண்கள் மட்டும்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள புல எண் 137/3ல் பரப்பளவு 3 ஏர்ஸ் என்றும், புல எண் 160/6ல் பரப்பளவு 22 1/2 ஏர்ஸ் என்றும், புல எண் 160/4ல் பரப்பளவு 2 1/2 ஏர்ஸ் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட புல எண்களில் உள்ள இடங்கள் அனைத்தும் நஞ்சை வகைப்பாட்டில் தான் உள்ளது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எங்களது அலுவலகத்திற்கு இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் அனுபவத்தை பற்றி கூறவோ உரிமையாளர்களின் விபரத்தினை பற்றி கூறவோ சாட்சியம் அளிக்க கோறப்படவில்லை என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு மேற்படி புல எண்களில் உள்ள சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்ற விபரத்தினை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில்தான் நில உரிமையாளர்களின் விபரத்தினை கூறுகிறேன் என்றால் சரிதான். கடந்த 1987 லிருந்து கழுவையனும் அவரது வாரிசுதாரர்களும்தான் மேற்படி புல எண்களில் உள்ள வழக்கு சொத்தை அனுபவம் செய்து வருகிறார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் கொண்டு வந்துள்ள சா.சா.ஆ.2 ஆன அடங்கலில் ஒவ்வொரு வருடமும் யார் நிலங்களை பயிர் செய்து வருகிறார்கள் அதில் என்ன பயிர் செய்து வருகிறார்கள் என்ற விபரம் குறிப்பிடப்படவேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ.2 ல் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்ற விபரம் இல்லை என்றால் சரிதான். நிலத்தின் உரிமையாளரின் பெயர் மட்டும்தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் கொண்டுவந்துள்ள அடங்கலின் பசலி காலம் 1435 என்பது நடப்பு ஆண்டு என்றால் சரிதான். நடப்பாண்டில் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்ன பயிர் செய்து வருகிறார்கள் என்ற விபரம் சா.சா.ஆ.2 ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அதில் நில உரிமையாளரின் பெயர் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பாண்டிற்கான பயிர்காப்பீடு தேதி 15.11.2025 ல் முடிவடையும் என்றால் சரிதான். நான் வழக்குசொத்தினை நடப்பாண்டில் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்ன பயிர் செய்து வருகிறார்கள் என்ற விபரத்தினை கிராம நிர்வாக அலுவலரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. கடந்த 1987 லிருந்து உள்ள சிட்டா, அடங்கல்களை ஒப்படைத்தால் யார் இவ்வளவு காலம் பயிர் செய்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சா.சா.ஆ 2 ஆன அடங்கல் ஆவணங்களில் உள்ள column களில் உள்ள விபரங்கள் சரியாக பூர்த்தி செய்யப்படாததால் சட்டப்படி ஏற்றுக்கொள்ளகூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல மேற்படி columnகள் கட்டாயமாக பூர்த்தி செய்யப்படவேண்டியதில்லை. மேற்படி விபரங்கள் தனிப்பதிவேடுகள் மூலமாக கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிக்கப்படும் ஆவணத்தின் பெயர் என்ன என்றால் அதற்கு குறிப்பிட்ட பெயர் ஏதும் இல்லை. நான் மேலே குறிப்பிட்ட தனிப்பதிவேடு என்பது எங்களது தாலுக்கா அலுவலகத்தில் ஏதும் இல்லை என்று தெரியும் என்றாலும் நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.11.14 15:44:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.